**Vol:4 Issue 2 Nov.2020** **P.g No: 01 - 08**




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

***முனைவர் ஆ. சந்திரன்***

*உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை*

*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

*திருப்பத்தூர் மாவட்டம்.*

shcpt.edu

***தலைப்பு : களப்பிரர் யார் என்பது?***

*களப்பிரர் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தனர்? மூன்று பெருவேந்தர்கள் அவர்களுக்கு அடங்கிப் போனது எவ்வாறு? என்பன போன்ற வினாக்களுக்குப் பலர் விடை காண முயன்றுள்ளனர். அவற்றில் இதுவரை பின்வரும் விளக்கங்கள் கூறப்படுகின்றன. களப்பிரர் ஆட்சி கி.பி.275 உருவாகியிருக்கலாம் என்கிறார் வரலாற்று ஆய்வாளர் நீலகண்ட சாஸ்திரி. கி.பி 3 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் உருவாகியிருக்கலாம் என்கிறார் டி.வி.சதாசிவ பண்டாரத்தார். கி.பி.250 களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றினர் என்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி. பேலூர் தாலுக்கா ஹல்மிடி கல்வெட்டு களபப்பு நாட்டின் அரசன் திண்டிகன் என்பவன் கங்க அரசன் ஸ்ரீபுருசனுக்கு அடங்கி இருந்தான் என்று குறிப்பிடுகிறது. பெரு வேந்தர்களை வெற்றி கொண்டதாகக் கூறப்படும் களப்பிரர் "கன்னட நாட்டுக் களபப்பு அரசை ஆண்ட சிற்றரசர் வழியில் வந்தவர்கள். அவர்கள் கடம்பர், கங்கர் போன்ற பிற அரசர்களுக்கு வழிவழியாக அடங்கியிருந்துள்ளனர். வேள்விக்குடிச் செப்பேடு பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று பாண்டிய நாட்டை மீட்டெடுத்தான் என்கிறது. அதே காலகட்டத்தில் சிம்மவிஷ்ணு களப்பிரரை வென்று சோழ நாட்டை நிறுவினான்.*

*"அளப்பரிய ஆதிராசரை அகல நீங்க அகலிடத்தைக்*

*களப்ரளென்னும் கலியரசன் கைக்கொண்டதனை இறக்கியப் பின்*

பருகடன் முளைத்த பருதிபோல் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு

விடுகதிர் அவிரொளி விலகவீற் றிருந்து

வேலை சூழ்ந்த வியலிடத்துக்

கோவும் குறும்பும் பரிவுடன் முருக்கிச்

செங்கோ லோச்சி வெண்குடை நீழல்

தங்கொளி நிறைந்த தரணீ மங்கையைத்

தன்பால் உரிமை நன்கனம் அமைத்த

மானம் பேர்த்த தானை வேந்தன்

ஒடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த

கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்" *(வேள்.செ.39-50)*

என்ற வேள்விக்குடிச் செப்பேடு குறிப்பும்,

"தரணிமங்கையைப்

பிறர்பால் உரிமை திறவிதின் நீக்கித்

தன்பா லுரிமை நன்கனம் அமைத்த

மானம் பேர்த்த தானை வேந்தன்

ஒடுங்கா மன்னர் ஒளிநகர் அழித்த

கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னன்"

என்ற தளவாய்புரச் செப்பேடு குறிப்பும் பாண்டியர் இழந்த நாட்டைப் பெற்றதைப் புலப்படுத்துகிறது. மேலும் தோற்ற களப்பாளர் பற்றி

"கற்றிந்தோர் திறம்பாவக் களப்பாளரைக் களைகட்ட

மற்றிரள்தோள் மாக்கடுங்கோ"

என்றும்,

"கடிராறு கவின் அலங்கல் களப்பாழ குலம் களைந்தும்"

என்றும் குறிப்பிடுகிறது.

யாப்பருங்கலக் காரிகையில் இடம்பெற்றுள்ள மேற்கேள் பாடலாக நான்கு இடம்பெற்றுள்ளன. அவை மூவேந்தர்களால் பாடப்பட்ட பாடல்களாகும். பின்வரும் பாடல் சேர மன்னன் பாடியதாகும்.

"தினைவிதைத்தார் முற்றந் தினை யுணங்கும் செந்நெல்

தனைவிளைத்தார் முற்ற மதுதானாம் – கனைசீர்

முரசுணங்கும் சங்குணங்கும் மூரித்தேர்த் தானை

அரசுணங்கும் அச்சுதன்தன் முற்றத்து"

இவ்வாறே பிற மன்னர்களது பாடல்களும் அமைந்துள்ளன. இப்பாடல்களில் களப்பிரர்களை 'அச்சுதன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**களப்பிரர் யார்? அறிஞர்கள் கருத்துக்கள்**

மேற்கண்ட செய்திகள் களப்பிரர் யார்? என்ற கேள்விக்கான புரிதலை அறிஞர்களுக்கிடையே உண்டாக்கியுள்ளது.

சேர சோழ பாண்டியர் களப்பாளரைத் தமிழில் பாடியுள்ளதால். பி.டி.சீனிவாச அய்யங்கார் களப்பிரர் தமிழரே என்ற கருத்தை முன்வைக்கிறார். தமிழ் நாட்டுக் குறுநில மன்னர் குடியைச் சார்ந்த முத்தரையரே களப்பிரர் என்பது திரு பி.வி.சதாசிவ பண்டாரத்தார் கருத்துக் கூறுகிறார். கன்னட நாட்டு களப்பிர அரசர்கள் தமிழகத்தை ஆண்ட களப்பிரர் என்பது மயிலை சீனி.வேங்கட சாமி கருத்தாக உள்ளது. களப்பிரர் காலத்தில் தொண்டை மண்டலம் அதாவது வட தமிழ் நாடு பல்லவர்களால் ஆளப்பட்டுள்ளது. 'அச்சுதக் களப்பாளன்' என்னும் பெயர் கொண்ட மன்னன் ஒருவன் முடியுடை மூவேந்தரையும் வென்று சிறைப்படுத்தினான் என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது (பக்கம் 14). சேர, சோழ, பாண்டியர்களை 'அச்சுதன்' இரும்புச் சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்த போது மூவேந்தர்கள் பாடிபுகழ்ந்து கெஞ்சியது (அ.சவரிமுத்து, விடியலை நோக்கிக் களப்பிரர் வரலாறு முன்னுரை).

**அவிழாத முடிச்சுகள்**

இதுவரை கண்டவை களப்பிரர்கள் பற்றி அறிஞர்கள் ஆராய்ந்த செய்திகள். இவற்றிலும், இவற்றிற்கப்பாலும் அவிழாரத முடிச்சுக்கள் பல உள்ளன அவற்றைக் குறித்து இனிக் காண்போம்.

**களப்பிரர் வெற்றிகொண்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள் யார்?**

பாண்டியன் உக்கிரவழுதி, சோழன் செங்கணான், சேரமான் கோக்கோதை மார்பன், கொங்கு நாட்டுக் கணைக்கால் இரும்பொறை ஆகியோர் கடைசி சங்க அரசர்களாக இருந்துள்ளனர் என்ற குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் களப்பிரர்களால் தோற்கடிக்கப்பட்ட மன்னர்கள் பற்றிய குறிப்புகள் ஏதும் இதுவரை அறியகிடைக்கவில்லை.

**களப்பிரர் – களப்பாளர் – களப்பாழர்**

அத்துடன் களப்பிரர் – களப்பாளர் – களப்பாழர் என்ற சொற்களில் உள்ள வேறுபாடு முக்கியமாகக் கருதப்படவேண்டியுள்ளது. தளவாய்புரச் செப்பேட்டில் “களப்பாழர்“ என்று களப்பிரர் குறிக்கப்பட்டுள்ளனர். வேள்விக்குடிச் செப்பேட்டில் “களப்பிரன்“ என்று குறிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு செப்பேடுகளில் உள்ள முரண்பாடு சிந்திவேண்டிய ஒன்று. அத்துடன் இந்த இடைவெளி இச்செப்பேடுகள் படிக்கப்பட்ட முறை சரியா? என்ற வினாவையும் எழுப்பத் தவறவில்லை. அதே நேரம் சங்க இலக்கியங்களின் பின்புலத்திலும் சில ஐயங்கள் உள்ளன.

shcipt.edu

**களப்பிரர் யார் ? சங்கஇலக்கிய பின்புல மதிப்பீடு**

கி.பி 3-6 வரையான காலகட்டம் தமிழ் நாட்டின் இருண்ட காலம் என்று அழைக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்களின் அரசியல் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய சாரியான தரவு கிடைக்கமல் பேனதே அற்குக் காரணம். ஆனால் வேள்விக்குடிச் செப்பேடுகள், தளவாய்புரச் செப்பேடுகள் கிடைத்த பிறகு அக்கலத்தில் களப்பிரர் என்ற ஒரு பிரிவினர் மூவேந்தர்களைத் தோற்கடித்து தம் ஆட்சியை விரிவுபடுத்தினர் என்ற செய்தி வெளிப்பட்டது. யார் இந்த களப்பிரர்கள் என்ற வினாவிற்கு இரு வேறுபட்ட கருத்து பிரதானமாக முன்வைக்கப்படுகிறது.

ஒன்று களப்பிரர் கன்னட நாட்டைச் சார்ந்த களபப்பு நாட்டை ஆண்ட குறுநில மன்னர்கள். இரண்டு தமிழகத்தின் முத்தரையர்கள், கள்வர் முதலானவர்களில் ஒரு பிரிவினர்.

இந்த இருகருத்தும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு கிடைத்த தரவுகளின் அடிப்படையில் சொல்லப்பட்டு வருகின்றன.

அதே சமயம் களப்பிரர்களோடு தொடர்புடையதான குறிப்புகள் பல கிடைக்கின்றன. அதாவது, களமர் என்போர் வயல்வெளிக் களத்தில் போரடித்து வாழும் உழவர் பெருமக்கள் என்கிறது சங்க இலக்கியம். இவர்கள் களத்திலேயே வீடு கட்டிக்கொண்டு வாழ்வர் (புறம். 387), வேங்கைப் பூவைத் தலையில் சூடிக்கொள்வர் (நற்.125); அரித்த கள்ளை அருந்துவர் (புறம். 212); நெல் தூற்றுவர். இவர்கள் கரும்பு வெட்டும்போதும் (அகம். 366); நெல் அறுக்கும்போதும் இசையுடன் பாடுவர் (பொருநர்.194); சேற்று நிலத்தில் உழும்போதும் (மது.கா. 260, 393), எருதுகளை ஓட்டும்போதும் (மலை.படு. 469) இசைகூட்டிப் பாடுவர் என்று சங்க இலக்கியப் பாடல்களில் பரவலாகக் களமர் என்ற (களப்பிரர் என்ற பெயருடன் தொடர்புடையதாக) பெயரில் இடம்பெற்றுள்ளதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு கிடைக்கின்ற தரவுகள் மற்றும் அறிஞர்களின் முரண்பட்டக் கருத்துக்களுக்கு இடையில் நாம் ஒன்றை அறிய வேண்டியுள்ளது அதுதான் திருவெள்ளரைக் கல்வெட்டுத் தரும் செய்தி.

> “வெறியார் தளவத் தொடைச் செயமாறன் வெகுண்டது ஒன்றும்
> அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்து
> பரியாத தூண் இல்லை கண்ணன் செய்பட்டினப்பாலைக்கு அன்று
> நெறியல் விடும் தூண் பதினாறுமே அங்கு நின்றனவே”

கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இக்கல்வெட்டுச் செய்தி நமக்கு இரு உண்மைகளைப் புலப்படுத்துகின்றன.

1. மன்னர்கள் தங்களுக்குள் பகைத்துக்கொண்டாலும் புலவர்களை மிகவும் மதித்துவந்துள்ளனர்
2. போரில் தோற்கடிக்கப்பட்ட பகைவர் நாட்டின் வரலாறு முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு உண்மைகளுடன் “வெற்றி பெற்ற மன்னர்கள் எழுதிய கல்வெட்டுகள், செப்பேடுகள் தரும் செய்திகள் நூறு விழுக்காடு உண்மையனவை என்று அப்படியே ஏற்றுக்கெள்வது சரியா? என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் அதற்குத் துணைபுரிவது போல் சங்க அகப்பாடல்களில் சில

செய்திகள் இடம்பெற்றுள்ளதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். தலைவன் பொருளீட்ட புல்லியின் வேங்கட மலையைக் கடந்து வடுகர் நாட்டுக்கு அப்பாலுள்ள மொழிபெயர்தேயம் சென்றுள்ளதாக அகம் *27, 31, 61, 67, 83, 107, 127, 209, 211, 213, 253, 265, 281, 295, 311, 349, 359, 375, 381, 393, 389 295* ஆகிய பாடல்களில் கூறப்பட்டுள்ளன. அத்துடன் *“சேரனது நாட்டுக்கு அப்பாலுள்ள வெப்பம் மிகுந்த கொடிய காடு, மலைவழியைக் கடந்து சென்றதாக” (அகம்.389:15-24)* ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

நன்னனது விண்ணைத் தொடும் அளவு உயர்ந்த மலைகளைக் கடந்து சென்றதாகவும் *(அகம்.173:8-18)*, எருமை என்பவனின் நாட்டின்கண் உள்ள அயிரை என்னும் ஆற்றினைக் கடந்து சென்றதாகவும் *(அகம்.253:9-20)*, கண்ணன் எழினி என்பானது தேன் மிகுந்த முதுகுன்றம் என்னும் மலையைக் கடந்து சென்றதாகவும் *(அகம்.197: 5-9)* ஒவ்வொரு பாடலில் கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் தலைவன் தேடிச்செல்லும் பொருள் பற்றிய குறிப்புகளில், தலைவன் தேடிச் செல்லும் பொருள் பற்றிய இடங்களில் சோழன் - உறந்தை *(அகம்.93:4-7)* சேரன் கொடுமுடி -ஆமூர் *(அகம்159: 13-21)*, இமயமலை, நந்தர் – பாடலிபுரம், கங்கையாறு *(அகம் 265:1-7)*, சேரலாதன் *(அகம்.127:3-11)*, சோழர் -காவிரி பெருந்துறை *(அகம்.123:8-14)*, கரிகால் வளவன் -இடையாறு *(அகம்.141:12-24)* உறையூர் *(அகம்.237:8-14)*, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், நன்னன் *(அகம்.199:16-24)*, சோழன் *(அகம்.201.12-19)*, குடநாடு *(அகம்.91:9-18)*, உறையூர் *(அகம்.237:8-14)*, சேரலாதன் -மரந்தை *(அகம்.127:311)* போன்ற மன்னர்கள், நகரங்கள் பற்றிய குறிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சோழர் பாண்டியர் செய்த போரில் மருத நிலம் அழிக்கப்பட்டுள்ளது *(பட்டி.பா.237-269), (மது.கா152-176)* விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மேற்கண்ட சங்கப்பாடல்களின் குறிப்புகள் இருவிதமான போக்குகளை நமக்குத் தருகின்றன.

- ஒன்று சங்கக் காலத்தில் தமிழர் ஆண்ட பல பகுதிகளில் நகர அமைப்பு இருந்தது. அங்கு செல்வம் கொழித்தது.
- இரண்டாவது மக்கள் செல்வம் ஈட்டுவதற்காக வெளியூர்களுக்குக் குறிப்பாக பிறமொழிபேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது.
- நிலக்குடிகள் மீது (குறிப்பாக மருதம்) தாக்குதல்கள் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளன.

மேலும், இவையெல்லாம் நாம் பெருமையாகப் பேசும் மூவேந்தர்கள் வாழ்ந்த காலத்தில் நடந்துள்ளன.

அடுத்ததாக நாம் பார்க்க வேண்டிய பகுதி பக்தி இலக்கிய காலம். இருண்டகாலத்தின் பிடியிலிருந்து நாட்டை மீட்டதே பக்தி இயக்கத்தின் நோக்கம் என்பது போன்ற செய்திகளைக் கூறும் இலக்கிய வரலாற்று நூல்கள் இரு செய்தியை முதன்மை படுத்துகின்றன. ஒன்று சமணபெத்த சமயங்களை தமிழ் மண்ணில் இருந்து வெளியேற்றுவது. இரண்டு தமிழ் மொழியைக் காப்பது. இவைதான் பக்தி இயக்கத்தின் நோக்கம் என்கிறது. தமிழ்மொழிக்கு மாற்றாக பாலி பிராகிருதம் ஆகிய மொழிகளும் சமண பௌத்த சமயமும் மன்னர்கள் மூலம் மக்களிடம் திணிக்கப்பட்டன என்ற வாதம் சமயக்குரவர்கள் வரலாற்றுடன் இணைத்துக் கூறப்படுகின்றன. உண்மையில் இவை உண்மை என்றால் பாலி பிராகிருதத்தைக் காட்டிலும் சமஸ்கிருதம் தமிழில் கலந்ததைப் பற்றிய எதிர்வினை தோன்றாமையும், பிற்கால பாண்டியர்கள் மற்றும் சோழர்கள் சமஸ்கிருதத்தையும் அம்மொழியைப் பேசும் பிராமணர்களையும் உயர்ந்த இடங்களில் வைத்து ஆராதனை செய்ததின் பின்புலத்தையும் கருத்தில் கொள்ளாமல் விடுவது ஏன்? களப்பிரர் காலம் சண்டையும் பூசலும் இருந்திருந்தால் எப்படி திருக்குறள் முதலான நூல்களில் கூறப்படும் உலகளாவிய சிந்தனைகள் தோன்றியிருக்கும்? பழமொழி என்ற மரபின் எச்சங்கள் காக்கப்பட்டிருக்கும்? என்பன போன்ற வினாக்களும் இங்கு இயல்பாக எழுகின்றன. இத்தகைய வினாக்கள் பின்புலங்களில் விளக்கங்கள் தேட வேண்டிள்ளன.

**பயன்பட்ட நூல்கள்**


1. டாக்டர் மு. அருணாசலம் *தமிழ் இலக்கிய வரலாறு, பன்னிரண்டாம் நூற்றாண்டு (இரண்டாம் பாகம்)* 2005 ((முதல் பதிப்பு 1973, திருத்தப்பட்ட பதிப்பு), தி பார்க்கர், தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், 291 அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
2. டாக்டர். மா. இராச மாணிக்கனார், கால ஆராய்ச்சி, 2003 (முதல் பதிப்பு) அலமு பதிப்பகம், 9 அய்யா முதலி தெரு, இராயபேட்டை சென்னை - 600 014.
3. வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், 2002 (இரண்டாம் பதிப்பு), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. ஆ.பத்மாவதி, **களப்பிரர்கள் கால மொழி, எழுத்து, கலை, சமயம்**. மணற்கோனி. ஏப்ரல் 2011.
5. பாண்டியன் செப்பேடுகள் பத்து, வேள்விக்குடிச் செப்பேடு 31-40.
6. டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113.
7. மயிலை சீனி.வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், 2010, நாம் தமிழர் பதிப்பகம்.

8. *Epigraphia Indica, Vol. XVII, 1923, pp. 291 – 309.*

9. *Kerala State gazetteer, Volume 2, Part 1 By Adoor K. K. Ramachandran Nair, P. 146*

10. *The peacock, the national bird of India By P. Thankappan Nair, P. 150 and P. 152*

11. Arunachalam, M. (1979). *The Kalabhras in the Pandiya Country and Their Impact on the Life and Letters There* (Original from the University of California, Digitized Jul 30, 2008 ). University of Madras. பக். 168

12. http://www.keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamdec13/25928-2014-01-10-05-39-20.

shctpt.edu